**<u>தேதி:-24-09-2021 அசல்வழக்கு எண்.101/2017 வா.சா.1 (ரவி)</u>**

**<u>குறுக்குவிசாரணை:- (10, 11 பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

இந்த வழக்கு நடத்துவதற்கு முன்பு மாவட்ட வருவாய் அலுவலகத்தில் ஒரு மனு கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த மனு தயாரிப்பதற்கும், மற்றும் இந்த வழக்கு பிராது தயார் செய்வதற்கும் நான்தான் தகவல் சொன்னேன். மேற்படி மனுவில் பத்தி 4 ல் ராணியம்மாள் கொடுத்த பணத்தில்தான் அடமானம் தீர்க்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ராணி ஜெயராம்நாயுடுவின் மனைவி ஆவார். இந்த விபரத்தை பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி மனுவில் பத்தி 5 ல் நான் 27.02.2006 ஆம் தேதி பாகப்பிரிவினைகோரி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும் அதற்கு 1 ஆம்பிரதிவாதி பாகப்பிரிவினையை மறுத்து 16.03.2006 ஆம் தேதி வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பை சென்னையில் இருந்து அழகர்சாமி அனுப்பியுள்ளார். அந்த அறிவிப்பில் என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணையில் 16.03.2006 ஆம் தேதியிட்ட பதில்அறிவிப்பை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். பதில்அறிவிப்பை பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் ஆதியில் கிருஷ்ணசாமிநாயுடுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். கிருஷ்ணசாமிநாயுடு 1954 ல் இறந்துவிட்டார். சாட்சி தற்போது இறந்த வருடம் சரியாகத் தெரியவில்லை என்று கூறுகிறார். கிருஷ்ணசாமிநாயுடுக்கு மதுரை தாலுகா தல்லாகுளம் கிராமத்தில் வீடும் மற்றும் அதை சார்ந்த 10 செண்ட் இடமும் இருந்தது என்றால் சரிதான். அவர் இறந்த பின்னர் மேற்படி சொத்தை அவர் மகன்கள் மூன்று பேரும் வாய்மொழியாக பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி

வாய்மொழி பாகம் நடக்கும் போது மற்ற சொத்துக்களை பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு குடும்பத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்தால் எல்லாச் சொத்துக்களையும் பிரித்துக் கொள்வார்கள் என்றால் சரியல்ல. என் தாத்தா கிருஷ்ணசாமிக்கு சிறுதூர் கிராமத்தில் 2 ஏக்கர் 36 செண்ட் வயல் இருந்தது என்றால் சரிதான். அந்த வயலை என் தகப்பனாருக்கு கீழ்பக்கமும், சுந்தரராஜநாயுடுக்கு மேல்பக்கமும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதே மாதிரி வாய்மொழி பாகத்தில் தாவாச் சொத்து ஜெயராம்நாயுடுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 3 செண்ட் விஸ்தீரணமுள்ள வீட்டை நான் விற்றுவிட்டேன். அந்த பத்திரத்தில் ராணியம்மாள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் எங்களில் மூணாவது இனத்தின் பங்கிற்கு ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏழு ஆவணங்களில் வாய்மொழி பாகத்தின் நோக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுந்தரராஜூநாயுடுக்கு மொத்தம் 9 குழந்தைகள் என்றால் சரிதான். அவர்களில் மூன்று பேரை மட்டும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி உயிரோடு இருப்பவர்களை சேர்த்ததாக கூறுகிறார். நான் வழக்கில் எல்லா சொத்துக்களையும் குறிப்பிடாமல் பகுதியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. யூ.டி.ஆர் சர்வே 1980 ஆண்டிற்கு முன்பு நடந்தது என்றால் சரியல்ல. யூடிஆரில் ராணியம்மாள் மற்றும் அவரது மகன் பெயர் சேர்க்கப்பட்டு அதன் பிறகு சொத்தை அவர்கள் அடமானம் திருப்பி தனித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சுமார் 35 ஆண்டுகளுக்கு பின்பு சந்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்த பின்னர்தான் ஆவணங்களை எடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்தால் மேற்படி விபரம் துலங்கும் என்றால் சரியல்ல. நர் கோரியுள்ள பரிகாரம் காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலாவதி தோசத்தை மறைப்பதற்காக 1 ஆம் பிரதிவாதியின்

வழக்கறிஞர் பதில் அறிவிப்பை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் விற்பனை செய்துள்ளார் என்றும், அதில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் அனுபவம் மற்றும் தீர்வை எந்த காலத்திலும் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். நான் கோரியுள்ள எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 8, 9 பிரதிவாதிகளின் தகப்பனார் சந்திரன் நல்லெண்ணத்தின் பேரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.